**<u>உதவி அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>**

**SC .No.87/2016**

**25.02.2026**

**பெயர் : கோகிலா (PW 1 )**

**க/பெ. : பழனிச்சாமி**

**வயது :**

**தொழில் :**

**முகவரி : போடிப்பட்டி**

**<u>மனுவின் பேரிலான குறுக்கு விசாரணை</u>**

என் வீட்டில் இருந்து சாய்பாபா கோவிலுக்கு செல்ல வேண்டும் என்றால் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு வரவேண்டிய தேவையில்லை என்று சொன்னால் அது சரியல்ல. நான் கொடுத்த புகாரில் என்னுடைய 6 பவுன் செயின் காணாமல் போனதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் என்னிடம் பறிக்கப்பட்டதாக சொல்லப்படும் செயினின் நீளம் பற்றி எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். ஆனால் நான் செயினை அடையாளம் காட்டினேன். என்னிடம் இருந்து செயினை இழுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் என்னுடைய செயின் வழக்கத்தை விட அளவு நீளமாக தொய்வு ஏற்பட்டது. இந்த விவரத்தை என்னுடைய புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். இந்த செயின் என்ன வகையான மாடல் அதாவது முறுக்கு செயினா, கோபி மாடல் செயினா அல்லது பாம்பே மாடல் செயினா என்ற விவரத்தை நான் என்னுடைய புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள (சான்று பொருள் 1 ) செயினின் எந்த இடத்திலும் தொய்வு ஏற்பட்டதாக தெரியவில்லை என்று சொன்னால் நேரில் தொய்வு ஏற்பட்டது தெரிந்தது, ஆனால் புகைப்படத்தில் தொய்வு ஏற்பட்டதாக தெரியவில்லை. எனக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயம் என்னுடைய புகாரின் அடிப்படையில் நான் தடுமாறி கீழே விழுந்த காரணத்தினால் தான் காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரிதான். போலீசார்

விசாரிக்கும் போது எனக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் காயம் குறித்து நான் புகாரில் எவ்வாறு குறிப்பிட்டுள்ளேனோ அது போன்று தான் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது சரிதான். செயினில் உள்ள இணைப்பு ஒரு வளையம் கொண்டு இணைக்கப்பட்டுள்ளது. நான் ஏற்கனவே சாட்சியம் அளித்த போது ஒரு நபர் என்னை கத்தியை காட்டி செயினை கொடு என்று மிரட்டினார் என்று சொல்லியுள்ள விவரத்தை என்னுடைய புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்று சொன்னால் அது பற்றி தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகாரில் மேற்கண்ட விவரம் குறித்து எதுவும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. என்னுடைய முதல் விசாரணையில் என்னுடைய கொடியை பறித்து விட்டதாக சொல்லப்படும் சமயத்தில் எனது இடது கையில் அடிப்பட்டதாக சொல்லியுள்ளது பொறுத்து நான் என்னுடைய புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். என்னுடன் வந்த எனது சகோதரி பவளாயின் கழுத்தில் இருந்த மாங்கல்யத்துடன இருந்த கொடியை சண்டையிட்டு பறித்து கொண்டார்கள் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதியை நான் என்னுடைய புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் சமயத்தில் சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லப்படும் நபர்கள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் கத்தி எந்த வகையான கத்தி என்ற அடையாளத்தை குறிப்பிட்டு என்னுடைய புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். இருசக்கர வாகனத்தில் உட்கார்ந்திருந்த நபர் கத்தியால் குத்திவிடு என்று என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதி பொறுத்து நான் என்னுடைய புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். எனது அக்கா பவளாயின் செயினை தலையோடு பிடித்து இழுத்து விட்டார்கள் என்று என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதி பொறுத்து நான் என்னுடைய புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். என்னிடமும், எனது சகோதரியிடம் இருந்து பறிக்கப்பட்டதாக சொல்லப்படும் செயினானது முழுமையாக பறித்த நபர்களிடம் சென்றதா என்றால் என்னிடம் இருந்து பறித்தாக சொல்லப்படும் செயின் கொக்கி

கழண்டு அவர்களிடம் சென்று விட்டது, எனது சகோதரியிடம் இருந்து பறித்த முழுமையாக அவர்களிடம் சென்று விட்டது. எனது சகோதரி அவருடைய மாங்கல்யத்தை எதில் கோர்த்து செயினுடன் அணிந்திருந்தார் என்று கேட்டால் இருபுறமும் திருகு கொண்ட வெள்ளிகம்பியால் கோர்த்து அணிந்திருந்தார். போலீசார் விசாரிக்கும் போது நான் அணிந்திருந்த செயினும், எனது சகோதரி அணிந்திருந்த செயின்களானது எந்த கடையில் வாங்கப்பட்டது என்ற விவரத்தை கேட்டு தெரிந்து கெண்டார்கள் என்றால் இல்லை. அவர்களும் கேட்கவில்லை நாங்களும் அது பற்றி சொல்லவில்லை. அந்த செயின் எங்கே வாங்கப்பட்டது என்று கேட்டால் என்னுடைய செயினானது உடுமலைப்பேட்டையில் உள்ள கிருஷ்ணா ஜீவல்லரியில் வாங்கப்பட்டது. ஆனால் எனது சகோதரியின் செயின் எங்கு வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. என்னுடைய செயினில் கிருஷ்ணா ஜீவல்லரியின் குறியீடு இருக்கும் என்று சொன்னால் அது சரிதான். கிருஷ்ணா ஜீவல்லரியின் குறியீடு என்னுடைய செயினில் இருக்கும் என்ற விவரத்தை நான் என்னுடைய புகாரிலும், போலீசார் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லப்படும் நபர்களின் உயரம், முக அடையாளங்கள், நிறம், பருமன் போன்றவற்றை நான் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். போலீசார் விசாரிக்கும் போது அந்த நபர்கள் எப்படி இருந்தார்கள் என்ற விவரத்தை என்னிடம் கேட்டார்களா என்றால் கேட்டார்கள். அப்படி போலீசார் கேட்கும் போது நான் பார்த்தால் அடையாளம் காட்டுவேன் என்ற விவரத்தை நான் என்னுடைய புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். போலீசார் இந்த வழக்கு பதிவை செய்த பின்னிட்டு என்னிடம் எதிரிகளை இவர்கள் தான் இந்த வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக தெரிவித்தார்கள் என்றால் நான் செல்போனை கொடுக்க சென்றேன் , அப்போது போட்டோக்களை காண்பித்தார்கள் நான் அடையாளம் காட்டினேன். செல்போனை நான் புகார் கொடுத்ததாக சொல்லும் சமயத்திலேயே நான் கொடுத்துவிட்டேன். நான் போலீஸ் நிலையத்தில் கொடுத்ததாக சொல்லப்படும் செல்போன் ஆனது என்ன வகை மாடல் ( Button type or Touch Screen) என்ற விவரத்தை நான் என்னுடைய புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். நான் கொடுத்ததாக சொல்லப்படும் செல்போனில் என்ன

வகை நிறுவனத்தின் சிம்கார்டு இருந்தது, அதன் IMENo போன்ற விவரங்களை ஆய்வு செய்தார்களா என்றால் இல்லை. என்னிடம் இருந்து வாங்கியதாக சொல்லப்படும் செல்போனை என் முன்னிலையிலேயே காவல் ஆய்வாளர் அதனை Pack செய்து முத்திரை இட்டாரா என்றால் இல்லை. ஆனால் போன் செய்தார். நான் கொடுத்த புகாரில் எனக்கு ஏற்பட்ட காயத்தின் காரணமாக மருததுவமனைக்கு சென்றுவிட்டு பின்னிட்டு புகார் கொடுக்க வந்ததாக சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். என்னிடம் போட்டோக்களை காட்டினார்கள் அதில் நான் அடையாளம் காட்டினேன் என்ற விவரத்தை தற்போது தான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் போது கூறுகிறேன் என்றும் வேறு எந்த இடத்திலும் அந்த விவரத்தை நான் குறிப்பிட்டுசொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லப்படும் நபர்களை நான் பார்த்தால் அடையாளம்காட்ட முடியும் என்று தெரியாததால் நான் கொடுத்த புகாரில் பார்த்தால் அடையாளம் காட்ட முடியும் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் அது சரிதான். என்னுடைய உறவினரில் யார் போலீஸ் என்று கேட்டால் என்னுடைய கணவரின் அண்ணன் முறை கொண்டவரின் மகன் போலீஸ் ஆவார் அவர் பெயர் மகேஸ் ஆகும். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், எதிரிகள் மீது இது போன்று பல்வேறு வழக்குகள் திருப்பூர் மாவட்டத்தில் புள்ளி விவரம் கணக்கிற்காக பதிவு செய்தார்கள் என்றும், அதற்கு கூடுதலாக வழக்குகள் தேவைப்படும் என்பதால் என்னுடைய உறவினர் மகனான மகேஸ் என்பவர் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் இந்த புகார் என்னால் பின்னிட்டு கொடுக்கப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும், இந்த வழக்கிற்கும் , இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. வேறு ஒரு சந்தர்ப்பத்தில் எனக்கு ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி இந்த வழக்கு பொய்யாக உருவாக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. 28.03.2014 ம் தேதி காலை 10 மணிக்கு மேல் தான் இந்த வழக்கில் உள்ள புகார் பொய்யாக உருவாக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் நானும், எனது சகோதரி பவளாயி 27.03.2014 ம் தேதியன்று பகல் 12.30 மணிக்கு சாய்பாபா கோவிலுக்கு செல்வதற்காக இந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்படும்

இடத்திற்கு சென்றதாக சொல்வதும், அப்போது பல்சர் இருசக்கர வாகனத்தில் 3 நபர்கள் வந்ததாகவும், அதில் ஒரு நபர் கத்தியை காட்டி மிரட்டியதாக சொல்வதும், எனது கொடியை பறித்து விட்டதாக சொல்வதும், அதன் காரணமாக எனது இடது கையில் காயம் ஏற்பட்டதாக சொல்வதும், எனது அக்கா பவளாயின் மாங்கல்யத்தை அந்த நபர்கள் சண்டையிட்டு பறித்து கொண்டதாக சொல்வதும், அதில் ஒரு நபர் கத்தியால் குத்திவிடுவதாக சொல்வதும், என்னிடம் இருந்தும், எனது அக்காவிடம் இருந்து நகைகளை பறித்து விட்டதாக சொல்வதும் பொய் என்று சொன்னால் அது சரியல்ல. நான் முதல் விசாரணையில் அடையாள காட்டிய கத்திக்கும், இந்த வழக்கிற்கும் ,இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. முதல் விசாரணையில் அடையாளம் காட்டிய சான்று பொருள் 1 மற்றும் 2 க்கும் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

ஒம்/−மு.தனபால்
உதவி அமர்வு நீதிபதி,
உடுமலைப்பேட்டை